**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
# TAMIL VIRTUAL ACADEMY

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)

**HG30 - நிலை 3 - (Grade 3)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Offline Examination)

**நவம்பர் - டிசம்பர் 2017**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பிரிவு - 1**

**I எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
Answer all questions in a word / line. (10 x 1 = 10)

1. பறவைகள் எவ்வாறு இறைவனைத் துதி செய்யும்?
2. இளங்கோவடிகளின் தந்தை பெயர் யாது?
3. முத்தமிழ்க் காப்பியம் என்று அழைக்கப் பெறுவது எது?
4. நான்மணிக்கடிகை எந்தத் தொகை நூலில் இடம் பெற்றுள்ளது?
5. பஞ்ச மூலம் என்பதன் பொருள் யாது?
6. திருக்குறளில் மொத்தம் எத்தனை குறட்பாக்கள் உள்ளன?
7. பாரதியார் எவ்வாறு சிறப்பிக்கப் பெறுகிறார்?
8. பாரதிதாசன் எத்தகைய விடுதலைக்கான பாடல்களைப் பாடினார்?
9. யாப்பு என்பது யாது?
10. அகத்திணைகள் எத்தனை வகைப்படும்?

**பிரிவு - 2**

**II எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
Answer any ten questions in three lines each. (10x2=20)

1. உலக மக்களை எவ்வாறு மதிக்க வேண்டும்?
2. வெற்றி பெற வேண்டுமானால் செய்ய வேண்டியது யாது?
3. கூடலின் பொருள் என்ன?
4. மழை பெய்வதற்கான அறிகுறிகள் எவையேனும் இரண்டு எழுதுக.
5. பாரதியார் யாரைத் தொழுகிறார்?
6. இறைவன் எப்படி உள்ளான் எனக் கூறுகிறார் உமறுப்புலவர்?
7. வானம் பார்த்த பூமியாக அமைந்தது எது?

8. தமிழ்நாட்டின் சிறந்த ஆறு எது?
9. குற்றாலத்தில் கிடைக்கும் பொருட்கள் யாவை?
10. வான ஊர்திகளின் வகைகள் யாவை?
11. மூவேந்தர் என்று அழைக்கப் பெறுபவர்கள் யாவர்?
12. மணி போன்ற மாணவர்களை எப்படி உருவாக்க வேண்டும்?
13. பொருள்கோள் என்றால் என்ன?
14. மரபு என்றால் என்ன?
15. புணர்ச்சி என்றால் என்ன?

## பிரிவு - 3

**III எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**

Answer any five questions in six sentences each. **(5x4=20)**

1. "திருமணப் பந்தலின் அழகியத் தோற்றம்" குறித்து எழுதுக.
2. நாரை விடு தூதில் புலவர் தம் நிலையை எவ்வாறு கூறுகிறார்?
3. "பெண் கல்வி" குறித்து பாரதிதாசன் கூறுவன யாவை?
4. திருமாலின் திருப்பெயர் எவ்வாறு போற்றப்படுகிறது?
5. முக்கூடற்பள்ளு பெயர்க்காரணம் கூறுக.
6. 'நடப்பதெல்லாம் நன்மைக்கே' பாடக் கருத்தைச் சுருக்கி எழுதுக.
7. ஆறுவகைப் பெயர்களை எழுதுக.
8. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## பிரிவு - 4

**IV ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**

Answer any one of the following questions in fifteen sentences. **(1x10=10)**

1. "நான்மணிக்கடிகை" கூறும் கருத்துகளை எழுதுக.
2. குற்றாலத்தின் இயற்கை அழகு குறித்து எழுதுக.
3. தமிழ்நாட்டின் பெருமைகளாக பாவாணர் கூறும் கருத்துகளை எழுதுக.

## பிரிவு - 5

**V ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**

Write an essay in three pages to any one of the questions. **(1x15=15)**

1. நெய்தல் நிலத்திற்குரிய கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.
2. "ஆறு தன் வரலாறு கூறல்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.